

# ஸ்ரீ வாராஹி அம்மனை ஏப்படி வழிபட வேண்டும்?

வராஹி அம்மன் என்பது மஹா காளியின் அம்சமாகும். வராஹியை வழிபடுகிறவர்களுக்கு மூன்று லோகத்திலும் எதிரிகள் இல்லை.

தன் பக்தர்களை காக்கும் சாந்த ரூபிணியாகவும் தாயாகவும் இருக்கும் வராஹியின் மூல மந்திரத்தை 1008 உரு வீதம் 26 நாட்கள் ஜெபம் செய்ய ஸ்ரீ மஹா வராஹி அருள் கிட்டும்.

ஸ்ரீ வாராஹி வாக்கு சித்தி அருள்வதில் ஸ்ரீ உச்சிஷ்ட கணபதியைப் போலவே முதன்மையானவள் .எனவே இவளை உபாசிப்பவர்கள் யாரையும் சபிக்கக்கூடாது அவை உடனே பலிக்கும் ஆனால் அதனால் பாதிப்படைந்தவரின் வேதனைக்கான பாவம் விரைவில் நம்மை வந்தே சேரும் அதில் இருந்து அன்னை நம்மைக் காக்க மாட்டாள்.எனவே எவருக்கும் அழிவு வேண்டி வணங்காமல் ”எதிரிகளால் துன்பம் ஏற்படாமல் காக்குமாறு” வேண்டி வழிபட வேண்டும்.

ஸ்ரீ மகாவாராஹியை ஆக்ஞா சக்கரத்தில் தியானிக்க வேண்டும்.

**வழிபாட்டு முறைகள் :-**

புதன்,சனிக்கிழமைகள்,திரயோதசி திதி,பஞ்சமி திதி,நவமி,திருவோண நட்சத்திரம் அன்றும் வழிபடலாம்.எல்லா மாதங்களிலும் வரும் வளர்பிறை அஷ்டமி அன்று வழிபட சிறப்பான பலன்களைப் பெறலாம்.

ஆடி மாதம் வளர்பிறையின் முதல் 10 நாட்கள் இவளின் நவராத்திரி அந்த நாட்களில் தினமும் அவளுக்கு விருப்பமான நைவேத்தியங்களுடன் பூஜிக்க வல்வினைகள் யாவும் தீரும் என்று மந்திர சாஸ்திர நூல்கள் கூறுகின்றன

செல்வம் ,அரசியல் வெற்றி,பதவி,புகழ் வேண்டுவோர் பஞ்சமியிலும், மனவலிமை,ஆளுமை,எதிர்ப்புகளில் வெற்றியடைய அஷ்டமியிலும் சிறப்பாக வழிபடவேண்டும்.

**எந்த திசையில் வழிபட வேண்டும்?**

எல்லா ஜெபங்களுக்கும் கிழக்கு நோக்கியும்,எதிர்ப்புகள் தீர தெற்கு நோக்கியும் அமர்ந்து ஜெபிக்கலாம்.

**ஆடை அலங்காரம்**

ஆலயங்களில் உள்ள ஸ்ரீ வாராஹி தேவிக்கு சிவப்பு நிற ஆடைகளை அணிவிக்க காரியத் தடைகள் நீங்கும்.

வெள்ளைப் பட்டு அணிவிக்க வாக்கு வன்மை ,கல்வியில் மேன்மை உண்டாகும்.

மஞ்சள் பட்டு அணிவிக்கக் குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்,திருமணத்தடை நீங்கும்.

பச்சைப் பட்டு அணிவிக்கச் செல்வப்பெருக்கு ஏற்படும்.

நீலவண்ணப் பட்டு அணிவிக்க எதிர்ப்புகளில் வெற்றி கிட்டும்

**விளக்கு**

ஸ்ரீ வாராஹி உபாசகர்கள் விளக்கிற்கு பஞ்சு,தாமரைத்தண்டு,வாழைத்திரி பயன்படுத்தலாம்.அதிலும் தாமரைத்தண்டு திரி மிகச் சிறந்தது.

**நைவேத்தியங்கள்:**

தோல் எடுக்காத உளுந்து வடை,மிளகு சேர்த்த வெண்ணை எடுக்காத தயிர்சாதம்,மொச்சை ,சுண்டல்,சுக்கு அதிகம் சேர்த்த பானகம்,மிளகு சீரகம் கலந்து செய்த தோசை,நவதானிய வடை, குங்குமப்பூ, சர்க்கரை, ஏலம், லவங்கம்,பச்சைகற்பூரம் கலந்த பால்,கருப்பு எள் உருண்டை ,சர்க்கரை வள்ளிக்கிழங்கு,தேன் படைக்கலாம்.

**பூஜை முறைகள்/பலன்கள்:**

வெள்ளை மொச்சை பருப்பை வேக வைத்து தேன், மற்றும் நெய்யுடன் கலந்து வராஹிக்கு படைத்து, பூஜை செய்ய வேண்டும். இதன் பலன் தன வசியம், தொழில் விருத்தி, மற்றும் வியாபாரம் செழிக்கும். இன்னும் பல அற்புதமான செயல்களை செய்யும்



# Varahi Amman – How to Worship?

Goddess Varahi is an aspect of Maha Kali. Those who worship Varahi have no enemies in the three worlds.

May Sri Maha Varahi be blessed to pray 1008 urus for 26 days of Varahi's Moola Mantra, who is the holy rubini and mother who protects her devotees.

Sri Varahi is the foremost in bestowing vow siddhi like Sri Uchishta Ganapati. So those who worship her should not curse anyone. They will be sacrificed immediately but the sin of the suffering of the victim will soon come upon us. From that the mother will not protect us.

Sri Mahavarahi should be meditated upon in Ajna Chakra.

## Rituals :-

You can worship on Wednesdays, Saturdays, Thiryodasi Tithi, Panchami Tithi, Navami, Trivandrum Nakshatra. Worshiping on Varapirai Ashtami in all the months gives great benefits.

The first 10 days of the waxing moon in the month of Aadi are her Navratri and during those days she is worshiped daily with her favorite Naivetiyas, according to Mantra Shastra texts.

Those who want wealth, political success, position and fame should worship better in Panchami and Ashtami for mental strength, personality and success in oppositions.

## Which direction (thisai) to worship?

You can sit facing east for all prayers and south for removal of objections.

Dress up Wearing red clothes to Sri Varahi Devi in temples will remove obstacles.

Wearing white silk will bring you strength and excellence in education.

To wear yellow silk, auspicious things will happen in the family and the marriage barrier will be removed.

Wearing green silk will bring wealth.

Wearing blue silk will win oppositions

## Lamp

Sri Varahi devotees use cotton, lotus stem and banana thread for the lamp. Lotus stem thread is the best.

## Neivethiyam:

You can make unpeeled urad vaad, non-dairy curd with pepper, mochai, sundal, sukku-rich drink, dosa mixed with pepper and cumin, navadaniya vada, saffron, sugar, elem, cinnamon, milk mixed with green camphor, black sesame balls, sugar beetroot, honey.

## Puja Methods/Benefits:

White mung beans should be boiled and mixed with honey and ghee and should be offered to Varahi and worshiped.

The result will be personal prosperity, career development, and business prosperity. It will do many more wonderful things